# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் - 01.09.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3370/SCIC/2024**

திரு. K.ரெங்கசாமி - மேல்முறையீட்டாளர்
த/பெ.திரு.கருப்பணன்
எண்.3, பழைய பஸ் நிலைய கட்டிடம்
திண்டுக்கல் - 624 001
Phone:99428 05127.

*/எதிர்/*

1.பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.
2.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து (கிழக்கு)
சென்னை பெருநகரக் காவல்
Anna Salai, Tiruvatiswaranpet, Chennai- 600002.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **24.05.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 13.07.2023 |
| 3. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 26.09.2023 & 10.11.2023 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 11.03.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 24/05/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மாநில காவல்துறை இயக்குநர், காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம், மைலாப்பூர், சென்னை-4 அவர்களுக்கு

அனுப்பி, அதில் "கடந்த 14/10/2024 அன்று சென்னை எழும்பூர் ரயில் நிலையம் எதிரில் புகாரி ஹோட்டல் அருகில் எனக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்க கேட்டு 16/03/2023 தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது - தொடர்பாக - மேற்படி தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மேற்படி சமூகம் நீதிமன்ற உத்தரவு விபரம் தெரிந்து கொண்ட தாங்கள், மேற்படி நீதிமன்ற உத்தரவை மதித்து இதுவரை தங்களது அலுவலத்தின் கீழ் பணியாற்றும் மேற்படி எதிரி மீது துறை ரீதியாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பாக முழு தகவல்கள் வழங்குக." என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.K.ரெங்கசாமி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி / செல்வி.S.மெல்லினா ஐடன், காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து (கிழக்கு), சென்னை பெருநகரக் காவல், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 16/12/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பான நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனு காவல் துணை ஆணையாளர், திருவல்லிக்கேணி காவல் மாவட்டம் அவர்களால், பிரிவு 6(3)-ன் கீழ் 10/11/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து (கிழக்கு) அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தும், அம்மனுவிற்கு 16/12/2024 தேதியிட்டுத்தான், மனுதாரருக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே, காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து (கிழக்கு), சென்னை பெருநகரக் காவல், சென்னை அவர்களை ஆணையம் எச்சரிக்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து (கிழக்கு). சென்னை பெருநகரக் காவல் அவர்கள் மனுதாரருக்கு, அன்னார் கோரியவாறு விரிவான, முழுமையான தகவல்களை ஒரு வார காலத்திற்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அது தொடர்பான நிறைவேற்றுகை அறிக்கையினை (Compliance Report) 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 3370/SCIC/2024**

**பெறுநர்**

1.பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
தலைமையிடம்
சென்னை பெருநகரக் காவல்
வேப்பேரி, சென்னை-600 007.

2.பொதுத்தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
போக்குவரத்து (கிழக்கு)
சென்னை பெருநகரக் காவல்
Anna Salai, Tiruvatiswaranpet, Chennai- 600002.

**மேல்முறையீட்டாளர்**

திரு. K.ரெங்கசாமி
த/பெ.திரு.கருப்பணன்
எண்.3, பழைய பஸ் நிலைய கட்டிடம்
திண்டுக்கல் - 624 001
Phone:99428 05127.

RG/Sr.PC